4. அறிக்கை அளித்தல்

அரசு உறுதிமொழிக் குழு

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *அடுத்து, அரசு உறுதிமொழிக் குழுவின் அறிக்கையை அளித்தல், திரு. சி. ஞானசேகரன்.*

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அரசு உறுதிமொழிக் குழுவின் தலைவராகிய நான் 1996-97 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை அரசு உறுதிமொழிக் குழுவின் முதலாவது அறிக்கையைப் பேரவைக்கு அளிக்கின்றேன்.

5. அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்)

டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக் கழகச் சட்டமுன்வடிவு, 1996.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *அரசினர் சட்டமுன்வடிவு, அறிமுகம் செய்தல். "1996-ஆம் ஆண்டு தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக் கழகச் சட்டமுன்வடிவு" மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.*

***மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"1996-ஆம் ஆண்டு தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக் கழகச் சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. ஆலடி அருணா: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.